மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப் பெற்றுள்ளது. அதன் மேல் ஒரு அறிக்கையை அவையில் வைக்க அரசு இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேரள முதல் அமைச்சர் முகமது கோயா அவர்கள் கேரள அசெம்பளியிலே தெரிவித்திருக்கிறார்கள், இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம், அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ரகுமான் கானை விட அதிக அக்கறை அரசுக்கு இதிலே இருக்கிறது. அமைச்சரவர்கள் விவரங்களைச் சேகரித்து விரைவிலே வைக்க இருக்கிறார்கள். அதை மேலும் துரிதப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறார் என்று நினைக்கிறேன். அதற்கு நன்றி.

திரு. ரா. கிருஷ்ணன் : எம்.எல்.ஏ.க்கள் விடுதியிலே ஃபோன் எப்பொழுது பார்த்தாலும் "அவுட் ஆப் ஆர்டர்" ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுங்கள்.

Thiru. K. Suppu : Sir, I raise on a point of order. Under Rule 184 of the Tamil Nadu Assembly Rules, a Member wishing to raise a matter privilege shall before the commencement of the sitting of the day. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேகமாகப் படித்து விட்டால் எனக்குத் தெரியாது என்று நினைக்காதீர்கள். அது "பிபோர் தி கமென்ஸ்மென்ட் ஆப் தி ஹவுஸ்". உட்காருங்கள்.

[முற்பகல் 10-20]

3. அறிவிப்புகள்.

அ. அலுவல் ஆய்வுக்குழுவில் ஓர் உறுப்பினர் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 193 (1)-ன் கீழ், 1979-80-ம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. துரை இராமசாமி அவர்களையும் உறுப்பினராக நியமிக்கிறேன்.